**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**DEPOSITION OF WITNESS**

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**CC.No.26/2021** **DATE : 11.12.2023**

அ.சா.7

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர்.சசிக்குமார் | Father's Name | : சீனிவாசன் |
| District | : சேலம் | Taluk | : சேலம் |
| Village | : சேலம் | Calling | : மருத்துவர் |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.12.2023. **(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் SKS மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 09-06-2020 ம் தேதியன்று பிற்பகல் 12.10 மணியளவில் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, செந்தில்குமார், த/பெ.கிருஷ்ணசாமி என்பவரை மாணிக்கம் என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவரை விசாரித்தபோது 08-06-2020 ம் தேதி, மாலை 06.30 மணியளவில் இளம்பிள்ளை அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி அருகே தன்னை அடையாளம் தெரிந்த 7 நபர்கள் இரும்பு கம்பி, சுத்தியால் தாக்கியதாக கூறினார்.

2) அவர் முதலுதவி சிகிச்சை எடப்பாடி அரசு மருத்துவமனையில் பெற்றுக்கொண்டு, மேல்சிகிச்சைக்காக மேற்படி மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு வெளிப்புற காயங்கள் இருந்தன. **காயம் 1)** இடது கையில் Ulna bone உடைந்திருந்தது. **காயம் 2)** வலது பக்க முழங்கையில் 4X1X1 செ.மீ அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது. **காயம் 3)** தையல் போடப்பட்ட காயம் 5 செ.மீ அளவில் இடதுபக்க தலையில் இருந்தது. **காயம் 4)** தையல் போடப்பட்ட காயம் 6 செ.மீ அளவில் உச்சந்தலையில் இருந்தது. **காயம் 5)** தையல் போடப்பட்ட காயம் 2 செ.மீ அளவில் இடதுபக்க காலில் முட்டிக்கு கீழே இருந்தது. **காயம் 6)** தையல் போடப்பட்ட காயம் 2 செ.மீ அளவில் வலது பக்க காலில் முட்டிக்கு கீழே இருந்தது.

3) அவரை பரிசோதனை செய்து உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் 1 கொடுங்காயம் என்றும், காயம் 2 முதல் காயம் 6 வரையிலானவை சாதாரண காயம் என்று காயச்சான்று வழங்கினேன் **(அ.சா.1 க்கு வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1) எடப்பாடி அரசு மருத்துவமனையில் அ.சா.1 முதலுதவி சிகிச்சை எடுத்து கொண்டு தன்னிடம் சிகிச்சைக்காக வந்தார் என்றால் சரிதான். அ.சா.1 க்கு Xray எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது. எடுக்கப்பட்ட Xray போலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதா என்றால் அ.சா.1-டம் உள்ளது. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயங்கள் ஒருவர் இருசக்கர வாகனத்திலோ அல்லது குடிபோதையில் ஓடி தானாகவே நிலைதடுமாறி கீழே விழுந்தால் ஏற்படக்கூடிய காயங்கள் என்றால் சரிதான்.

2) அ.சா.1 க்கு வலி உள்ளது என்று சொல்வது பொய்யாக கூட இருக்கலாம் என்றால் சரியல்ல, அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது, அதனால் வலி கண்டிப்பாக இருக்கும். எலும்பு முறிவு ஒருவர் கூர்மையான பகுதியின்மீது விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)-Sasikumar

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.